(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 186.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 மே 23, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0995/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குற்றவாளியென தீர்ப்புக்கூறப்பட்ட மக்களுக்கு மன்னிப்பளிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும்;

(iii) விடுதலை செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட நியதிகளையும்;

(iv) விடுதலை செய்யப்பட்ட வேளையில் ஒவ்வொருவரும் தனது தண்டனைக் காலத்தின் எப்பகுதியை பூர்த்தி செய்திருந்தனர் என்பதையும்;

(v) கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஏதேனுமொரு அரசியல்வாதி அல்லது தொடர்புடைய நபர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1320/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் புத்தளம்—கற்பிட்டி வீதியின் ஆலங்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள காணிப் பதிவு அலுவலகத்தில் வரைபட இலக்கம் 2396 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஏறக்குறைய நானூறு ஏக்கர் காணி போலி உறுதி தயாரித்து பார் ரீப் ரிசோர்ட்ஸ் பிரைவேட் லிமிரெட் நிறுவனத்தினால் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது இக்காணியில் ஆலங்குடா எனும் பெயரில் சுற்றுலாத்துறை ஹோட்டலொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிக்கான போலி உறுதி தயாரிக்கப்பட்டு உரிமை பெறப்படும் வரை அது பற்றி அரசாங்க உத்தியோகத்தர்களை விசாரித்தறியாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த போலிக் காணிக் கொடுக்கல் வாங்கல் பற்றி முறையான விசாரணையொன்று நடாத்தி அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியை மீளப் பெற அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) முறையான விசாரணை மேற்கொள்வதை ஆரம்பிக்கும் திகதி யாது என்பதையும்;

(iv) இதனோடு தொடர்புடைய தவறாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1735/ '11

3.

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மாணவர்களுடைய எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகம் மற்றும் ஒவ்வொரு பாடநெறிக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பீடத்திற்குமாக இணைத்துக்கொள்ளப்பட்ட மேற்படி மாணவர் எண்ணிக்கையானது 2011ஆம் கல்வி ஆண்டுக்காக அந்தந்தப் பீடங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு மாணவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்காகவும் அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதனூடாக அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்குக் கிடைத்த வருமானம் யாதென்பதையும்;

(iii) அந்தப் பணம் எப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) குறித்த பணம் அரசின் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1988/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழு தற்போது செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அது செயலிழந்த திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி ஆணைக்குழுவுக்கு கட்டிட வசதிகள் பெற்றுக் கொடுப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின் மேற்படி இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் யாரென்பதையும்;

(iv) மேற்படி கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் மாதாந்த வாடகை எவ்வளவென்பதையும்;

(v) நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய வசதிகளுக்காக மாதாந்தம் செலுத்தப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களது சம்பளங்ளுக்காக மாதாந்தம் செலவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்த நாள் முதல் இன்று வரை இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

1996/ '11

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கே உரித்தான மலர்ச்செடி வகைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய மலர்ச்செடி வகைகளின் எண்ணிக்கை யாது;

(iii) இலங்கைக்கே உரித்தான தாவர வகைகளின் எண்ணிக்கை யாது;

(iv) அதில், சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய தாவர வகைகளின் எண்ணிக்கை யாது;

(v) சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய இலங்கைக்கே உரித்தான விலங்கினங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிங்கராஜ உலக மரபுரிமை வன பாதுகாப்புப் பிரதேசத்திற்கு சுவீகரிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வனப் பிரதேசத்தின் ஊடாக, இலும்பகந்தையிலிருந்து சூரியகந்தைக்கு புதியதொரு பாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி பாதையின் நீளம் யாது;

(iii) மேற்படி பாதை நிர்மாணிக்கப்பட்டமையால் சிங்கராஜ வன பாதுகாப்புப் பிரதேசத்தின் தாவர மற்றும் விலங்கினங்களுக்கு பாதகமான தாக்கம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) மேற்படி பாதை நிர்மாணிக்கப்படுவதைத் தடுப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி பாதை நிர்மாணிக்கப்படுவதால், தற்போது ஏற்பட்டுள்ள சேதத்தினை குறைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2015/ '11

6.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் காரணமாக 2010 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தனிநபர் மரணங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வருடத்தில் புகையிரத விபத்துக்கள் காரணமாக அங்கவீனர்களான நபர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மரணங்களையும் விபத்துக்களையும் தடுப்பதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2157/ '11

7.

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ரன்வல அரசாங்க வைத்தியசாலை மூடப்படும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் மருத்துவர்கள் மற்றும் ஏனைய பதவியணியின் அலுவலர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(iii) தற்போது அங்கு ஒரு மருத்துவர் மாத்திரமே சேவையாற்றுகிறார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து மற்றும் வெளிவாரியாக சிகிச்சை பெறுகின்ற தற்போதைய நோயாளர்களின் சராசரி எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பதவியணியினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) ரன்வல அரச வைத்தியசாலை இந்நிலைமைக்கு உள்ளாவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் பதவியணியினரை துரிதமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2262/ '12

8.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டின் இறுதியளவில் இலங்கையில் அறியவந்திருந்த இருதய நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் அரச மருத்துவ மனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த மருத்துவ மனைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிகிச்சையை செய்துகொள்ளும் பொருட்டு காத்திருப்போர் பட்டியலிலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நோயாளர்கள் காத்திருப்போர் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2267/ '12

9.

கௌரவ சஜித் பிரேமதாச,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை விளையாட்டுத்துறைக் கிராமத்தை அமைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரதேசம் யாது;

(ii) மேற்படி விளையாட்டுத்துறைக் கிராம கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் காரணமாக இடம்பெயரும் குடும்பங்களின் எண்ணிக்கை, இழக்க நேரிடும் வாவிகளின் எண்ணிக்கை மற்றும் வயற்காணிகளின் அளவு யாது;

(iii) இடம்பெயரும் விவசாயக் குடும்பங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1652/ '11

10.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் பல வருடங்களாக இடைவிடாது சேவையில் ஈடுபடும் பாடசாலை கல்விசாரா ஊழியர்களின் சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும்;

(ii) 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட இவர்கள் இதுவரை சிறியதொரு நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்விசாரா ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ள நிலையிலும் இவர்களது சேவையை நிரந்தரமாக்காமலிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காரணங்களை தவிர்த்து இவர்களை நிரந்தர ஊழியர் குழாமில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1742/ '11

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) அரிசியின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களின் போது அரிசியின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியை வெவ்வேறாகவும்;

(iii) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் அரிசி இறக்குமதியாளர்கள், நெற்பயிற்செய்கையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் ஒரு கிலோகிராம் அரிசிக்கான உற்பத்திச் செலவையும்;

(ii) நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(iii) இறக்குமதிசெய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசிக்கு விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2008/ '11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் கிரிக்கட் அணி இலங்கைக்கு வருகை தந்த திகதியும் இலங்கையிலிருந்து வெளியேறிய திகதியும் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சுற்றுப்பயணத்தின் போது போக்குவரத்துக்காக ஏதேனும் நிறுவனம் அல்லது நிறுவனங்களிலிருந்து வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனின், பெற்றுக்கொண்ட மேற்படி வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) (i) மேற்படி சுற்றுப்பயணத்தின் போது போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(ii) இதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனின், விலைமனுக்கள் கோரப்பட்ட நிறுவனங்களுக்கு புறம்பாக வேறு நிறுவனங்கள் போக்குவரத்து சேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1653/ '11

13.

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின் தலாவ பிரதேச செயலாளர் பிரிவின் கண்டகுளம் மற்றும் கதுறுகஸ்வெவ ஆகிய கிராமங்களுக்கு குடி நீர் வசதிகளை செய்து கொடுப்பதற்காக இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் சமுதாய நீர் வழங்கல் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சமுதாய நீர்வழங்கல் திட்டத்தின்,

(i) நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) நிர்மாணிப்புகளை பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ள திகதி யாது என்பதையும்;

(iii) பூர்த்தி செய்வதற்கு செலவிட உத்தேசித்துள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) நிர்மாணிப்புகளுக்கு வெளிநாட்டு நிதிகள் பயன்படுத்தப்பட்டிருப்பின், அந்நிதியை வழங்கிய நிறுவனங்கள் அல்லது நிறுவனம் யாது என்பதையும்;

(v) உள்நாட்டு நிதி பெறப்பட்டிருப்பின், அதற்காக பின்பற்றப்பட்ட முறைமையியல் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை துரிதமாக பூர்த்தி செய்து பிரதேச மக்களின் குடி நீர்த் தேவையை நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1743/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் தகரத்திலடைக்கப்பட்ட மீனுக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2009/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரன்மிஹிதென்ன சினிமா கிராமம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்களை கொண்டுள்ளது என்பதையும்;

(ii) இக்கிராமம் திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) திறந்து வைக்கப்பட்ட திகதி முதல் இன்று வரை மேற்படி சினிமா கிராமம் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிப்பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி நிறுவனத்திற்கு கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரன்மிஹிதென்ன சினிமா கிராமத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் அல்லது திரைப்படங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆக்கத்தினதும் இயக்குனர், தயாரிப்பாளர் அல்லது தயாரிப்பில் ஈடுபட்ட நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சமூக சேவைகள் அமைச்சர்,— முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 17ஆம் 18ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் சமூக சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 மார்ச்சு மாதம் 16ஆந் திகதிய 1750ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.08ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 23ச ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதிய 1738/37ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2 0 12. 0 5 .11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 10.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.